மத்திய அரசு ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு பல வேண்டுகோள்கள் விடப்பட்டன என்பதை நினைவு கூர்கிறோம். இந்திய வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தமாக சமூக நீதி வழங்கிடும் இந்தப் புரட்சிகரமான முடிவை எடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும், பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது''.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, இந்தத் தீர்மானம் ஒரு நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியில் அனைத்து மக்களின் ஒருமுகமான ஆதரவு பெற்ற அனைத்துப் பிரதிநிதிகளாலும் ஒருமுகமாக நிறைவேற்றப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

14-20 மணி

7. சென்னை மத்திய சிறையிலிருந்து சில கைதிகள் தப்பிவிட்டதாக வந்துள்ள செய்தி (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும், அதைப்போலவே, ஜனதா தளக் கட்சியினுடைய நண்பர் விஜயராகவன் அவர்களும் ஒரு தகவலை என்னிடத்திலே சொல்லி, அதைப் பற்றி விளக்கம் அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். முழுவதுமாக அறிந்து விளக்கம் அளிப்பதாகச் சொன்னேன். அதன்படி இந்த அறிவிப்பு.

நேற்று இரவு 12 மணிக்கு மேல் 4 மணிக்குள்ளாக சென்னை மத்திய சிறையிலே இருந்து ஐந்து கைதிகள் ஒரே அறையிலே இருந்தவர்கள் தப்பி உள்ளார்கள். இவர்கள் வைக்கப்பட்டு இருந்த அறைக்கதவு இரவு பூட்டப்படவில்லை என்றும் பின்பு பூட்டியுள்ளதா என்பதை வார்டர்கள் சரி பார்க்கவில்லை என்றும் முதல் அறிவிப்பு கூறுகிறது. இது சிறைத்துறையிலே பணிபுரியும் கிரேடு 1 மற்றும் கிரேடு 2 வார்டர்களின் கூட்டு சதியோடு கூடிய ஏற்பாடு என்று சந்தேகிக்கப்படுகிறது. இதனால் இன்றைக்குக் காலையில் 12 சிறைப் பணியாளர்களை சிறைத் துறைத் தலைவர் வேலை நீக்கம் செய்ததோடு அவர்களில் மூவர்மீது கிரிமினல் பிராசிகியூசன் செய்யப் புகார் மனு கொடுத்து, அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு, அந்த மூவர் மீதும் விசாரணை நடந்து வருகிறது. வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் ;

ஜெயிலர்	1	
அசிஸ்டன்ட் ஜெயிலர்	1	
சீப் வார்டர்கள்	3	பேர்கள்
கிரேடு–1 வார்டர்	1	
கிரேடு-2 வார்டர்	6	
	12	பேர்கள்

தப்பியவர்கள் ஐந்து பேர்கள் ஆட்டோ சங்கர், செல்வம், மோகன், குமார், ராஜா என்கிற ஹரிகிருஷ்ணன். இவர்களில் முதல் மூவரும் ஒரே வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள். மற்ற இருவரும் வேறு ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள். இன்று செய்தி தெரிந்ததும் காவல்துறை, தப்பியவர்களைப் பிடிக்க ஒரு சிறப்பு அணி அமைத்து, அவர்களைத் தேடும் பணியில் ஈடுபடுத்தி உள்ளது. இது தவிர, அவர்களை உடனே பிடிக்க எல்லாக் காவல் நிலையத்திற்கும் செய்தி தரப்பட்டு உள்ளது. சென்னை நகரப் போலீஸ் மிகவும் உஷார் நிலையில் வைக்கப் பட்டு உள்ளது என்பதை அவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

8. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்).

மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரச் சட்டத்தை நிரா கரிக்கும் தீர்மானத்தை அளித்த பேராசிரியர் க. பொன்னுசாமி மற்றும் திரு. பி. மாரப்பன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லை.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

---

* 20–8–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.